**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.**

**முன்னிலை : திரு. S. ஜவகர், B.L.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2023-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 19-ஆம் நாள் வியாழக் கிழமை**

**E.A.No.79/2022 in E.A.No.64/2022 in**
**E.P.No.136/2020 in O.S.No.143/2012**

சரவணகுமார் .. மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிராக/

1. தேன்மொழி
2. மைனர் குமரன் (எ) ஆதிரை அழகன்
மைனருக்காக கார்டியன் தாயார் 1-வது
எதிர்மனுதாரர் தேன்மொழி .. எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்

இம்மனுவானது என் முன்பு 09.01.2023 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.உமாபதி அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.ராம்மோகன் அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

**உத்தரவு**

மேற்படி பிரிவு 47 சி.பி.சி. மனுவான E.A.No.64/2022 in E.P.No.136/2020 in O.S.No.143/2012 என்ற மனுவில், 15.06.2022 அன்று மனுதாரர் ஆஜராகாததால்,

மனுதாரரின் தவறுகைக்காக 15.06.2022 அன்று தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை ரத்து செய்து, மனுவினை மீண்டும் கோப்பிற்கு எடுத்து விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி, மனுதாரர், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை-9, விதி-9 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

<u>மனுதாரர் தரப்பு மனு உரையின் சுருக்கம் பின்வருமாறு</u> :

2. இம்மனுதாரர், மேற்படி நிறைவேற்றுகை மனுவில் எதிர்மனுதாரர். மனுதாரர் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவின்பேரில், மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்து விசாரணைக்கு இருந்த நிலையில், மனுதாரர் தரப்பில் பிரிவு 47 சி.பி.சி. மனு தாக்கல் செய்திருந்தார். அதன்பேரில் நோட்டீஸ் மற்றும் ஈரங்கி ஆட்சேபணைக்கு 15.06.2022-ல் வைக்கப்பட்டிருந்தது. மனுதாரரின் வழக்கறிஞர், அவரின் நாட்குறிப்பில் தவறுதலாக டைரியில் 16.06.2022 என்று குறிப்பிட்டு மனுதாரருக்கு தேதி தெரிவித்திருந்தார். இந்த நிலையில், தவறுதலாக மனுதாரர் வராமல் போனதின் பேரிலும், மனுதாரரின் வழக்கறிஞரும் வராமல் போனதன்பேரிலும் 15.06.2022 அன்று மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள பிரிவு 47 சிபிசி படியான மனு தள்ளுபடி ஆகிவிட்டது. தற்சமயம் மனுதாரர் வழக்கு சம்மந்தமாக கோர்ட்டுக்கு வருவது சம்மந்தமாக கேட்கும்போது தான் தெரிய வந்துள்ளது. ஆதலால் 15.06.2022-ல் ஏற்பட்ட தள்ளுபடி உத்தரவினை ரத்து செய்து வழக்கினை கோப்பிற்கு எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமும், நியாயமுமாய் உள்ளது. எனவே, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள பிரிவு 47 சி.பி.சி. மனுவில் 15.06.2022-ல் ஏற்பட்ட தள்ளுபடி உத்தரவினை ரத்து செய்து, பிரிவு 47 சி.பி.சி. மனுவினை விசாரணைக்கு உத்தரவிடவேண்டுமாய் பிரார்த்திக்கிறார்.

3. **1-வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2-வது எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்** :

மனுவானது தகுதியின் அடிப்படையில் நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யத்தக்கது. மனுதாரர் பிரிவு 47 சி.பி.சி மனு தாக்கல் செய்து, அதன் பின்னிட்டு, மனுதாரரின் வழக்கறிஞர் வாய்தா 15.06.2022 என்பதற்கு பதிலாக 16.06.2022 என்று தவறுதலாக வாய்தா தேதி குறித்துக் கொண்டார் என்றும், அதனால், மனுதாரரால் 15.06.2022 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகமுடியவில்லை என்றும், மனுதாரர், கட்டளை 21 விதி 106-ன் கீழ் மனுவினை மீண்டும் கோப்பிற்கு எடுக்கக்கோரி கட்டளை 21, விதி 106-ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் விபத்தில் அடிப்பட்டுவிட்டதால், மனுதாரரால் நீதிமன்றத்தில் ஆஜராகமுடியவில்லை என்று மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது மற்றும் ஆதாரமற்றது. மனுதாரர் வழக்கறிஞர் மீது குற்றம் சுமத்தமுடியாது. தரப்பினர்கள் தான், வழக்கறிஞரை சந்தித்து, நீதிமன்ற வாய்தாவிற்கான சரியான அறிவுறுத்தலை பெறவேண்டியது தரப்பினர்களின் கடமையாகும். மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ள சங்கதிகள் முழுவதும் பொருத்தமற்றது. நீதிமன்றத்திற்கு வரும் வழியில் மனுதாரர் விபத்தில் சிக்கிக்கொண்டு, மருத்துவமனையில் மனுதாரர் அனுமதிக்கப்பட்டார் என்று மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது. 16.06.2022 அன்று விபத்து நடந்தது என்பதற்கு அது சம்மந்தமாக மனுதாரர் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர், வழக்கு நடவடிக்கையை தாமதப்படுத்தவே இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் அனுமதிக்கக்கூடிய தகுதியில்லை. எனவே, மனுவினை செலவுத் தொகையுடன்

தள்ளுபடி செய்யப்படவேண்டுமாய் பிரார்த்திக்கிறார்.

4. **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாதெனில்</u>** :

மனுதாரர் மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>பிரச்சனை</u>** :

5. இருதரப்பும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யப்பட்டன. பிரிவு 47 சி.பி.சி. மனுவான E.A.No.64/2022 in E.P.No.136/2020 in O.S.No.143/2012 என்ற மனுவில், 15.06.2022 அன்று மனுதாரர் ஆஜராகாததால், மனுதாரரின் தவறுகைக்காக 15.06.2022 அன்று தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை ரத்து செய்து, மனுவினை மீண்டும் கோப்பிற்கு எடுத்து விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி, மனுதாரர், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை-9, விதி-9 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனுவிற்கு எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சபேணை தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, மனுதாரருக்கு அவருடைய வழக்கினை நிரூபிக்க நிபந்தனையின் அடிப்படையில் ஒரு சந்தர்ப்பம் அளிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதி, இம்மனுவானது நிபந்தனையின்பேரில் அனுமதிக்கத்தக்கது என்று தீர்மானித்து, இவ்வாறாக இம்மனுவில் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுகிறது.

6. முடிவாக, மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு வழக்கு மனு செலவுத் தொகையாக ரூ.1,000/-ஐ வரும் 30.01.2023 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு செலவுத் தொகையை செலுத்த தவறும்பட்சத்தில் இம்மனுவானது

தம்மிச்சையாக தள்ளுபடியாகிவிடும் என்ற நிபந்தனையின்பேரில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. அழைக்க - 31.01.2023.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக உரைக்கப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2023-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 19-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2023.01.21 17:55:17 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.

**இணைப்பு** :

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** : இல்லை

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2023.01.21 17:55:40 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.